கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.92/2004** தேதி:**26.08.2025**

வாதி தரப்பு சாட்சி -1 (முத்துகிருஷ்ணன், த/பெ.கணேசன்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**2** மற்றும் **6** பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு சொத்தானது ஒரு தரும சொத்து என்றும் அதனை விற்க அதன் தர்மகர்த்தா ஒரு தலையான ஒரு தீர்ப்பு பெற்று யாருக்கும் தெரியாமல் விற்றுவிட்டார் என்றும் அதனை மீட்க இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம். நான் வழக்கு சொத்து தரும சொத்து என்பதை ஒப்புக்கொள்கிறேன் என்றால் ஒப்புக்கொள்கிறேன்.

2) இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட சொத்துக்களை தவிர்த்து வேறு தரும சொத்துக்களுக்கு அசல் வழக்கு எண் 964/2004 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கிலும் இவ்வழக்கில் கேட்டுள்ள அதே பரிகாரம் தான் கேட்டேன் என்றால் சரிதான்.

3) அந்த வழக்கு என்ன ஆனது என்றால் அது இன்னும் நிலுவையில் தான் உள்ளது. அதில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு எனக்கு தெரியாதா என்றால் தெரியாது. அந்த வழக்கில் எனக்கு எதிராக தீர்ப்பாகிவிட்டது என்றால் எனக்கு தெரியாது.

4) அதன் பெயரில் மேல்முறையீடு செய்த விவரமும் எனக்கு தெரியுமா என்றால்

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2025.08.27 04:59:16 +0530

தெரியாது.  அந்த மேல்முறையீட்டு மனு நிலுவையில் உள்ளதா முடிந்தவிட்டதா என்றால்  நிலுவையில் உள்ளதாக தான் சொன்னார்கள்.

5) 1908 மற்றும் 1920 ல் எழுதப்பட்ட உயில் மற்றும் பாக பிரிவினையில் பெயர் குறிப்பிடாமல் ஆண் வாரிசு என்று மட்டுமே குறிப்பிட்டுள்ளது. இந்த வழக்கில் நானும்  தரும சொத்துக்களுக்கு சட்டப்பூர்வமான வாரிசு என்று  பாரிகாரம் கோரி உள்ளேனா என்றால்  கேட்டுள்ளேன். அந்த மாதியான பரிகாரம் கேட்கப்படவில்லை என்றால் சரியல்ல.

6) வெங்கடாச்சலம் முதலியார் உயிருடன் இருந்தபோது தரும சொத்துகளில் சிலவற்றை விற்றார் என்பது பற்றிய விவரம் எனக்கு தெரியாது. தங்கராஜமுதலியாரும்  தரும சொத்துகளில் சிலவற்றை விற்றார் என்பது பற்றிய விவரம் எனக்கு தெரியாது.

7) தங்கராஜமுதலியார் விற்ற சொத்தினை இவ்வழக்கில்  தரப்பினராக உள்ள 4ம்வாதியான  சுதாகருக்கு விற்றுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.  அப்படி வாங்கப்பட்ட சொத்தினை 4ம் வாதியான சுதாகர்அவரது மணைவிக்குதான செட்டில் மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது.

8) 2ம் பிரதிவாதி அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும் அந்த விவரம் தெரிந்தே நீதிமன்றத்தில் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9)  தரும சொத்துக்களை நாங்கள் எந்த உத்தரவும் பெறாமல் விற்றது சரிஎன்றால்

PHEBE B

Digitally signed by PHEBE B
Date: 2025.08.27 04:59:24 +0530

பிரதிவாதிகள் நீதிமன்ற அனுமதியைப்பெற்று விற்றது தவறு என்று கோரி இவ்வழக்கினை தாக்கல் செய்ய எனக்கு எந்த உரிமையும் இல்லையும் என்றால் சரியல்ல.

10) நான் தரும உறுப்பினராக இல்லாத பட்சத்தில் 4 ம் வாதிகயானவர் வாங்கிய சொத்தும் விற்றதும் தவறு என்றால் அதற்கும் இதற்கும் சம்மந்தம் இல்லை. ஜனார்த்தமுதலியாருக்கு முன்பாக ஆண் வாரிசு என்று யார் இருந்தார்கள் என்றால் பத்மப்பிரியா தான் இருந்தார்கள்.

11) இந்த வழக்கில் உள்ள கிருஷ்ணசாமி முதலியார் தருமஸ்தாபனத்திற்கு ஜனார்த்தமுதலியார் தான் கடைசி தருமகர்த்தா என்றால் சரிதான். நான் இந்த வழக்கில்ஜனார்த்தமுதலியார் மீது கூறிவுள்ள குற்றங்களுக்கு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் அதற்காகத்தான் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன்.

12) ஜனார்த்தமுதலியார் எதிராக காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் அளித்தேனா என்றால் இல்லை. நான் கூறுமாறு ஜனார்த்தமுதலியார் எந்த ஒரு தவறும் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவு பெற்று முறையாகத்தான் ஜனார்த்தமுதலியார் விற்றார் என்றாலும் வாதிகள் உயிலின் கீழ் பயனாளிகள் இல்லை என்பதாலும் வாதிகளுக்கு அதனை குறித்து கேள்வி கேட்க உரிமை இல்லை என்றாலும் சரியல்ல.

13) தருமஸ்பானத்திற்கு மொத்தம் எத்தனை பயனாளிகள் என்றால் 25

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2025.08.27 04:59:30 +0530

நபர்களுக்கு மேலாக இருக்கிறார்கள். இந்த 25 நபர்களையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் 7 நபர்களை மட்டுமே சேர்த்துள்ளேன் மீதி நபர்கள் வெளி ஊர்களில் இருப்பதால் வழக்கு நடத்த வரவில்லை.

14) வழக்கு தாக்கல் செய்த போது வழக்கு சொத்தின் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. தற்போது அதன் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் 2 கோடி முதல் 3 கோடி ரூபாய்க்கு கை மாறியதாக கேள்விப்பட்டேன்.

15) நான் எனது வாதுரையில் வழக்கு சொத்தானது 55 லட்சம் மதிப்பு உடையது என்றும் அதனை குறைவான மதிப்பிற்கு கிரையம் செய்துள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நானும் மற்ற வாதிகளும் சேர்ந்து பிரதிவாதிகள் பெயரில் இருந்த பட்டாவை ரத்து செய்துள்ளோம் என்றால் சரிதான்.

16) சமீபத்தில் பிரபாவதி பட்டா மாற்றத்திற்கு கொடுத்த மனுவில் வாதிகள் ஆட்சேபனை தெரிவித்தார்கள் என்றால் எனக்கு தெரியாது . 7 ம் பிரதிவாதி வாங்கிய சொத்தில் ஒரு பாகம் 16 ஆம் பிரதிவாதிக்கு விற்கபட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும் .

17) 16 ஆம் பிரதிவாதி அவர் வாங்கிய சொத்திற்கு அவர் பெயருக்கு பட்டா மாற்றம் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அது எனக்கு தெரியும் என்றாலும் அவருடன் என்னால் மோத முடியாது என்ற காரணத்தினால்

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2025.08.27 04:59:47 +0530

அதனை ஆட்சேபனை மனு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

18) எனக்கு இந்த வழக்கினை தாக்கல் செய்ய வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. சார்பு நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்ய இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்றால் சரியல்ல. வாதிகளாகிய நாங்கள் கேட்டுள்ள பரிகாரங்கள் நிலைக்கத்தக்க அல்லது என்றால் சரியல்ல. அவ்வாறு கேட்கப்பட்டுள்ள பரிகாரங்களுக்கு சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தாததால் இவ்வழக்கு தள்ளுபடிக்கு அறுகமானது என்றால் சரியல்ல.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை முற்றிற்று .

PHEBE B

Digitally signed by PHEBE B
Date: 2025.08.27 04:59:53 +0530